<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP No.1/2018 Date: 05.10.2023.

PW1- மணி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்த போன வீரமணி என் மகன். அவருக்கு பிறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. இறக்கும் போது என் மகனின் வயது 35 என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்த சதீஷ்குமார் எனது 2 வது மகன். வீரமணி கவனகுறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சதீஷ்குமார் கொடுத்த போலீஸ் புகார் பொய்யானது என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை மற்றும் தீர்ப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவற்றை தாக்கல் செய்யாதற்கான காரணம் எதுவும் என்னால் சொல்ல இயலாது. வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாத காரணத்தால் இம்மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரின் கவனகுறைவு விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. என் மகனின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள என் மகனின் தொழில் மற்றும் வருமானம் வழக்குக்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள போக்குவரத்து செலவு அதிகம் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-மணி

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.